இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 06-08-2025

# தென் மாவட்டங்களின் தொழிற்புரட்சி!

தனது ஆட்சிக்கு 'திராவிட மாடல் ஆட்சி' என்று அடையாளம் சூட்டிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 'எல்லோர்க்கும் எல்லாம்' என்ற உள்ளடக்கத்தையும் சொன்னார். அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மக்கள் வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி, அனைத்து மாவட்டத்து வளர்ச்சி என்று விளக்கமும் அளித்தார். இந்த உன்னதமான நோக்கம் தினந்தோறும் நிறைவேறிவரும் காட்சிகளைத்தான் தொடர்ந்து பார்த்து வருகிறோம்.

**பொதுவாக சென்னையைச் சுற்றி, அல்லது பெரிய நகரங்களைச் சுற்றி தொழிற்சாலைகள் அமையும் சூழலை மாற்றி, அனைத்துப் பகுதிகளுக்கும் அனைத்து விதமான தொழிற்சாலைகளையும் கொண்டு சென்றார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதிக தொழிற்சாலைகள் உள்ள மாநிலமாக, அதிகத் தொழிலாளர்கள் உள்ள மாநிலமாக, அதிலும் குறிப்பாக அதிக பெண் தொழிலாளர்களைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. இதற்குக் காரணம், 'அனைத்து மாவட்ட வளர்ச்சி' என்ற முதலமைச்சரின் நோக்கம் ஆகும். 'சிப்காட்' தொழில் வளாகங்கள் அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டு வருவதும் இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான்.**

இந்த வரிசையில் கடந்த 4 ஆம் தேதியன்று தூத்துக்குடியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டங்கள் தென் மாவட்டங்களின் தொழிற்புரட்சிக்கு அடித்தளம் அமைத்துள்ளன.

தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருக்கிறது. இந்த நிறுவனங்களின் மொத்த மதிப்பு 32,554 கோடி ரூபாய் ஆகும். இதன் மூலமாக 49 ஆயிரத்து 845 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். நான்கு நிறுவனங்களின் வணிக உற்பத்தியை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதன் மொத்த மதிப்பு 1,230 கோடி ரூபாய் ஆகும். இதன் மூலமாக 3,100 பேர் வேலை வாய்ப்பைப் பெறுகிறார்கள். மூன்று நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இன்று (4.8.2025) தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 32,554 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 49,845 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கிடும் வகையில் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 1,230 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 4 முடிவுற்ற திட்டங்களின் வணிக உற்பத்தியினை தொடங்கி வைத்து, மூன்று நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட வர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

**வியட்நாம் நாட்டைச் சேர்ந்த வின்ஃபாஸ்ட் நிறுவனம் தனது மின்சார கார் உற்பத்தியை தூத்துக்குடியில் தொடங்கி இருக்கிறது. 18 மாதங்களுக்கு முன் இந்த நிறுவனத்துக்கான அடிக்கல்லை முதலமைச்சர் நாட்டினார். இப்போது அந்த நிறுவனம் தனது உற்பத்தியைத் தொடங்கி விட்டது. 1300 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 50 ஆயிரம் மின் வாகனங்களை தயாரிக்கப் போகிறார்கள். இந்தியாவின் இரண்டாவது முழு மின்வாகன உற்பத்தித் திட்டம் இதுதான்.**

**"இந்தியாவின் மொத்த மின் வாகன உற்பத்தியில், 40 விழுக்காடு தமிழ்நாட்டில் இருந்துதான் உற்பத்தியாகிறது! தமிழ்நாடுதான், இந்தியாவின் வாகன உற்பத்தி மற்றும் மின் வாகன உற்பத்தியின் 'கேப்பிட்டல்' என்று நெஞ்சை நிமிர்த்தி நான் சொல்வேன்! சென்னைதான் இந்தியாவின் டெட்ராய்ட்! திருப்பெரும்புதூரில் எப்படி முதல் கார் உற்பத்தி திட்டம் தொடங்கப்பட்டதோ, அதேபோன்று, இன்றைக்கு தூத்துக்குடியில் முதல் மின்வாகன உற்பத்தித் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது! இதனால், தூத்துக்குடி மட்டுமல்ல; தமிழ்நாட்டின் தென் மாவட்டங்கள் மிகப் பெரிய தொழில் பகுதியாக வளர்ச்சியடையும். அதனால், உறுதியோடு சொல்கிறேன்; இந்நாள் தென் மாவட்டங்களின் ஒரு பொன்னாள். இதுதான், தமிழ்நாட்டின் 'Ease of doing Business'க்கு அத்தாட்சி" என்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்லி இருப்பது வெறும் வார்த்தைகள் அல்ல. வருங்காலத்தில் நாம் காணப்போகும் காட்சிகள் ஆகும்.**

முதலமைச்சரின் 'நான் முதல்வன்' திட்டத்தில் பயிற்சி பெற்ற தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட டிப்ளமோ மாணவர்கள் இந்த நிறுவனத்தில் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். தென் மாவட்டத்தைச் சேர்ந்த பணியாளர்களைத்தான் இந்த நிறுவனம் அதிகமாக வேலைக்கு எடுக்க இருக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் தென் மாவட்டங்களில் தொழில்வளர்ச்சி மிகச் சிறப்பாக இருந்துள்ளது. தூத்துக்குடியில் நியோ டைட்டல் பார்க், மதுரையில் டைட்டல் பார்க், நெல்லையில் எரிசக்தித் திட்டங்கள், விருதுநகரில் ஜவுளி பூங்கா, தூத்துக்குடியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகியவை கொண்டு வரப்பட்டுள்ளன. தூத்துக்குடியை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையமாக அரசு வளர்த்தெடுத்து வருகிறது.

**கடந்த 4 ஆம் தேதி நடைபெற்ற விழாவில் நான்கு முக்கியமான அறிவிப்புகளையும் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். தூத்துக்குடியில் விண்வெளி பூங்கா, கப்பல் கட்டுமான நிறுவனம், ஏற்றுமதி மையம், நெல்லையில் உணவு பதப்படுத்துதல் மண்டலப் பிரிவு ஆகிய அறிவிப்புகளைச் செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். இவையும் இணைந்தால் தென் மாவட்டத்தில் தொழிற்புரட்சியானது நிச்சயம் நிகழும்.**

உலகளாவிய முதலீட்டில் உள்ளூருக்கான முழுமையான வளர்ச்சி என்கின்ற திராவிட மாடல் அரசின் நோக்கம் நிறைவேறி வரும் காட்சியாக இதனைச் சொல்லலாம்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (4.8.2025) தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தொழில், முதலீட்டு அரக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 32,554 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 49,845 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கிடும் வகையில் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. உடன், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், திருமதி பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணண், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், டாக்டர் அதுல் ஆனந்த், வி.அருண்ராய், மருத்துவர் தாரேஸ் அகமது, இல.நிர்மல்ராஜ், மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, RGE நிறுவனத்தின் தலைவர் டெய் வெய் லின், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி. ஷஜீவனா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.8.2025) தலைமைச் செயலகத்தில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில், 40 பசுமைத் தோழர்களுக்கு முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்ட நிறைவுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹு, இயக்குநர் ஆ.ர.ராகுல் நாத், வனத்துறைத் தலைவர் ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை சிறப்புச் செயலாளர் அனுராக் மிஸ்ரா, பட வனத்துறை சிறப்புச் செயலாளர் ஆஷிஸ் குமார் ஸ்ரீவஸ்தவா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் முனைவர். எம்.ஜெயந்தி, அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். ஜெ.பிரகாஷ், அண்ணா பல்கலைக்கழக ஆற்றல் கல்விகளுக்கான நிறுவனத்தின் இயக்குநர் எம்.வெங்கட ரமணன் ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டுக்கு 20 ஆண்டுகளில் ஓலைச் சுவடிகளை பாதுகாக்க ரூ.1,64 கோடி ஒதுக்கீடு!

# ஓலைச்சுவடிகளை டிஜிட்டல் மயமாக்க எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்வி!

*புதுடெல்லி, ஆக. 6 -*

தமிழ்நாட்டில் இருந்து சேகரிக்கப்பட்ட பழமையான கையெழுத்து பிரதிகளான ஓலைச் சுவடிகளின் பாதுகாப்பு பற்றி திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மக்களவையில் ஆகஸ்டு 4 ஆம் தேதி சில கேள்விகளை எழுப்பினார்.



இதுகுறித்து மக்களவையில் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எழுப்பிய கேள்விகள் வருமாறு :-

"தமிழ்நாட்டிலிருந்து கிடைத்துள்ள பழமையான கையெழுத்துப் பிரதிகளான ஓலைச் சுவடிகளை ஆவணப்படுத்துதல், டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு அரசு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? அல்லது மேற்கொள்ள முன்மொழிந்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

ஏற்கனவே இருந்த தேசிய ஓலைச் சுவடிகள் இயக்கம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட ஞானபாரதம் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இருந்து எத்தனை கையெழுத்து ஓலைச் சுவடிகள் கையகப்படுத்தப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு, டிஜிட்டல் முறையில் பாதுகாக்கப்பட்டுள் ளன? இன்னமும் பல தனிநபர்களிடம் முக்கியமான ஓலைச் சுவடிகள் இருக்கும் நிலையில் அவற்றை கையகப்படுத்த கொள்கை மற்றும் சட்ட தெளிவு இல்லாததால் இன்னமும் அவை தனி நபர்களிடமே இருக்கின்றன. அவர்களின் தயக்கத்தைப் போக்கி அந்த ஓலைச் சுவடிகளை சேகரிக்க அரசு திட்டம் வைத்திருக்கிறதா?

தேசிய ஓலைச்சுவடி இயக்கத்தின் கீழ் குறிப்பாக தமிழ்நாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன?

இந்த இயக்கத்தின் பிராந்திய மையங்கள் அல்லது டிஜிட்டல் மயமாக்கல் மையங்கள் தமிழ்நாட்டில் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?" ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் கலாசாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷேக்வாட் அளித்த பதில் வருமாறு :-

"தமிழ்நாட்டிலிருந்து பழமையான கையெழுத்துப் பிரதிகளான ஓலைச் சுவடிகளை ஆவணப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் டிஜிட்டல் மயமாக்குதல் ஆகியவற்றுக்காக ஒன்றிய அரசாங்கம் சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த முயற்சிகளில் ஓலைச் சுவடிகளை அடையாளம் காணுதல், அது தொடர்பான பாதுகாப்பு நுட்பங் களை பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் தமிழ்நாடு உட்பட மாநிலங்கள் முழுவதும் கல்வி மற்றும் கலாச்சார நிறுவனங்களுடன் கொள்கை ரீதியான ஒத்துழைப்பை நிறுவுதல் ஆகியவை அடங்கும்.

முந்தைய தேசிய ஓலைச் சுவடி இயக்கத்தின் (NMM) கீழ் சென்னை ஆழ்வார் பேட்டையிலுள்ள சிபிஆர் இந்தியதுணைக்கண்டவியல் ஆய்வு நிறுவனம், சென்னை பல்கலைக் கழகத்திலுள்ள ஓலைச் சுவடிகள் நூலகம், ஆசிய கல்வியியல் நிறுவனம் காஞ்சிபுரம், சந்திரசேகரேந்திர சரவஸவ்தி மகா வித்யாலயா காஞ்சிபுரம், சரபோஜி மஹால் நூலகம்தஞ்சாவூர், தமிழ்நாடு சர்வே டேட்டா ஆகிய நிறுவனங்கள் மூலமாக 2,13,902 ஓலைச் சுவடி கையெழுத்துப் பிரதிகள் ஆய்வு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், டிஜிட்டல் மயமாக்கல் பணிகள் கடந்த காலத்தில் நடக்கவில்லை. ஞான பாரதம் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டு ஒன்றிய பட்ஜெட்டில் ஒரு தேசிய டிஜிட்டல் களஞ்சியம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓலைச் சுவடிகளை தங்கள் வசம் வைத்திருக்கும் தனி நபர்களிடம் இருந்து அவற்றை கையகப்படுத்துவதற்காக அவர்களை தொடர்பு கொள்ளும் முயற்சிகளிலும் செயல்பாடுகளிலும் அரசு மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. அந்த ஓலைச் சுவடிகளின் மீதான அவர்களது உரிமை உள்ளிட்ட விஷயங்கள் பற்றியும் அரசு அக்கறை கொண்டுள்ளது.

தேசிய ஓலைச் சுவடி இயக்கத்தின் கீழ் ஓலைச் சுவடிகளை ஆவணப்படுத்துதலுக்கும், பாதுகாத்தலுக்கும் அரசு ஓலைச் சுவடி நூலகம் சென்னை. அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சரபோஜி மகால் நூலகம், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகம், சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மகா வித்யாலயா உள்ளிட்ட நிறுவனங்களுக்கு கடந்த 20 ஆண்டுகளில் இது வரை ரூ. ஒரு கோடியே 64 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள பல நிறுவனங்கள் ஞான பாரதத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன" என ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் மாநிலத் தலைநகர் பாஸ்டன் நகரிலுள்ள "பாஸ்டன் மாநாடு மற்றும் கண்காட்சி அரங்க வளாகத்தில்" (Boston Convention and Exhibition Centre) நடைபெற்றுவரும் சர்வதேசச் சட்டமன்ற உறுப்பினர்கள் உச்சி மாநாட்டில் (Global Legislative Summit) கலந்து கொண்டுள்ள கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், அம்மாநாட்டின் முதல் நாளன்று "மாநிலச் சட்டப்பேரவைகளின் தேசிய மாநாடு" (National Conference of State Legislatures – NCSL) கூட்டமைப்பின் தலைவரும் யூட்டா மாநில மேலவையின் (Senate) தற்காலிகத் தலைவருமான வாய்னே ஹார்பர் (Wayne Harper) அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.